


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.02.2026) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜவகர் நகர், சிவ இளங்கோ சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 11.37 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கொளத்தூர் காவல் துணை ஆணையாளர் அலுவலகம், K5 பெரவள்ளூர் காவல் நிலையம், போக்குவரத்து காவல் நிலையம் மற்றும் மாவட்ட சைபர் குற்றப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த காவல் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.தீரஜ் குமார், இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) ஜி.வெங்கடராமன், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ.அருண், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், கொளத்தூர் காவல் துணை ஆணையர் பி.குமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.02.2026) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜவகர் நகர், சிவ இளங்கோ சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 11.37 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கொளத்தூர் காவல் துணை ஆணையாளர் அலுவலகம், K5 பெரவள்ளூர் காவல் நிலையம், போக்குவரத்து காவல் நிலையம் மற்றும் மாவட்ட சைபர் குற்றப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த காவல் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்து, "நம்பிக்கை இருக்கையில் அமர்ந்து பொதுமக்களிடம் மனுக்களை பெற்றுக்கொண்டார்.

### கொளத்தூர் தொகுதி – ஜவகர் நகர் – சிவ இளங்கோ சாலையில்

# கொளத்தூர் காவல் துணை ஆணையாளர் அலுவலகம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

## அரசின் பல்வேறு திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்!

சென்னை, பிப்.11–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.02.2026) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜவகர் நகர், சிவ இளங்கோ சாலையில் வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 11.37 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கொளத்தூர் காவல் துணை ஆணையாளர் அலுவலகம், K5 பெரவள்ளூர் காவல் நிலையம், போக்குவரத்து காவல் நிலையம் மற்றும் மாவட்ட சைபர் குற்றப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த காவல் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார். மேலும், ஜவகர் நகர், சிவ இளங்கோ சாலையில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சார்பில் 2.82 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட H2S வாயு கட்டுப்பாட்டு அமைப்புடன் கூடிய IOT மூலம் செயல்படுத்தப்படும் தானியங்கி கழிவுநீர் உந்து நிலையத்தின் செயல்பாடுகளை தொடங்கி வைத்து, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 3.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு, இறகுப்பந்து விளையாட்டுத்திடல் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள புதிய நீருறிஞ்சி பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார்.

**கொளத்தூர் ஒருங்கிணைந்த காவல் அலுவலகக் கட்டடம் திறப்பு!**

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில், கொளத்தூர் சட்டமன்ற தொகுதி, ஜவகர் நகர், சிவ இளங்கோ சாலையில் 11.37 கோடி ரூபாய் செலவில் தரைதளம் மற்றும் நான்கு தளங்களுடன் 29,514 சதுர அடி கட்டடப் பரப்பளவில் கொளத்தூர் காவல் துணை ஆணையாளர் அலுவலகம், K5 பெரவள்ளூர் காவல் நிலையம், போக்குவரத்து காவல் நிலையம் மற்றும் மாவட்ட சைபர் குற்றப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த காவல் அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தின் தரைத்தளத்தில் வரவேற்பு கூடம், மின் தூக்கி வசதிகள், 15 இருசக்கரம் மற்றும் 14 நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான நவீன கழிப்பறை வசதிகள்;

முதல் தளத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவு, கொளத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையம், வரவேற்பு கூடம், காவல் ஆய்வாளர் அறை, உதவி ஆய்வாளர் அறை, எழுத்தர் அறை, ஆண்/பெண் கைதிகள் அறை, CCTNS கணினி அறை, ஆவணங்கள் வைப்பு அறை, ஆயுதக் கிடங்கு அறை, சொத்துகள் அறை, ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான நவீன கழிப்பறை வசதிகள்;

இரண்டாம் தளத்தில் துணை ஆணையர் அலுவலகம், வரவேற்பு கூடம், ஓய்வறையுடன் கூடிய துணை ஆணையர் அறை, துணை ஆணையரின் உதவியாளர்கள் அறை, கூட்டரங்கம், உணவு அறை (Pantry), ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான நவீன கழிப்பறை வசதிகள்;

மூன்றாம் தளத்தில் போக்குவரத்து காவல் நிலையம், வரவேற்பு கூடம், போக்குவரத்து ஆய்வாளர் அறை, போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளர் அறை, உதவி ஆய்வாளர் அறை, எழுத்தர் அறை, பொழுதுபோக்கு கூடம், ஆண் மற்றும் பெண் காவலர்களுக்கான ஓய்வறை, ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான நவீன கழிப்பறை வசதிகள்;

நான்காம் தளத்தில் கொளத்தூர் சரக காவல் உதவி ஆணையாளர் அலுவலகம், மாவட்ட சைபர் குற்றப் பிரிவு வரவேற்பு கூடம், உதவி ஆணையாளர் அறை, குற்றப்பிரிவு ஆய்வாளர் அறை, நுண்ணறிவு பிரிவு ஆய்வாளர் அறை, தீவிர குற்றவாளிகள் தடுப்புப் பிரிவு ஆய்வாளர் அறை, இணைய வழி குற்றப் பிரிவு அறை, குற்றப் பிரிவு விசாரணை அறை, தலைமை காவலர், எழுத்தர் மற்றும் காவலர் அறை, கைதிகள் அறை, ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிக்கான நவீன கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

இந்த ஒருங்கிணைந்த காவல் அலுவலகக் கட்டடம் கடந்த 5.08.2025 அன்று முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டி பணிகள் தொடங்கப்பட்டு, விரைவாக கட்டி முடிக்கப்பட்டு, இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின்போது, முதலமைச்சர் அவர்கள் "நம்பிக்கை இருக்கை"யில் அமர்ந்து பொதுமக்களிடம் மனுக்களை பெற்றுக்கொண்டார்.

**சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஆய்வு செய்தல்**

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜவகர் நகர், சிவ இளங்கோ சாலையில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சார்பில் 2.82 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட H2S வாயு கட்டுப்பாட்டு அமைப்புடன் கூடிய IOT மூலம் செயல்படுத்தப்படும் தானியங்கி கழிவுநீர் உந்து நிலையத்தின் செயல்பாட்டினை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, பார்வையிட்டார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் புதிய திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்**

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜவகர் நகர், சிவ இளங்கோ சாலையில் பெருநகர சென்னை மாநகரட்சியின் மூலதன நிதியின் கீழ் 3.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 இலட்சம் லிட்டர் மழைநீர் சேகரிப்பு அமைப்பு, நடைபாதை, இறகுப்பந்து விளையாட்டுத்திடல், சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள புதிய நீருறிஞ்சி பூங்காவிற்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) ஜி.வெங்கடராமன், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ.அருண், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலர், முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், சென்னை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், கொளத்தூர் காவல் துணை ஆணையர் பி.குமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**இதுவரை ரூ.6 கோடியே 41 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!**

**2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்**

**2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!**

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 41 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் 8 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 10-02-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

**நிதி உதவி பெறுவோர் விவரம்**

| | | |
|---|---|---|
| 1. | க.கதிர்வேல், அருள்தாஸ்புரம், தத்தனேரி, மதுரை 625002. | 25,000/–– |
| 2. | திருமதி அ.சரஸ்வதி, சின்னமனூர், உத்தமபாளையம், தேனி மாவட்டம். | 25,000/– |
| 3. | திருமதி ஒ. தமிழ்செல்வி, வார்டு–2, மடப்பாறை, திண்டுக்கல் மாவட்டம். | 25,000/– |
| 4. | கணேசன் (எ) கணபதி, லாந்தை, புத்தேந்தல் அஞ்சல், இராமநாதபுரம் | 25,000/– |
| 5. | மா.முத்துச்சாமி, பெரியபுளியம்பட்டி, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் | 25,000/– |
| 6. | இரா. பேச்சிமுத்து, மேலப்பாவூர், கீழப்பாவூர், தென்காசி மாவட்டம்.. | 25,000/– |
| 7. | எச்.சாகுல்ஹமீது, உடன்குடி, திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் | 25,000/– |
| 8. | எம்.சாகுல்ஹமீது, புதுக்கடை தெரு, மணாளக்குறிச்சி, கன்னியாகுமரி | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

---

### கார்ல்மார்க்ஸ் சிலை; முதல்வருக்கு நன்றி!

# வரும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு!

## இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் எஸ்.பாஸ்கரன் அறிவிப்பு!

சென்னை, பிப். 11 -

இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநிலச் செயலாளர் எஸ். பாஸ்கரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

எமது இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட்(எம்.கே) கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு 08.2.2026 ஞாயிற்றுக் கிழமை அன்று சென்னை தேனாம்பேட்டையில் உள்ள எமது கட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள தோழர் எம்.கல்யாணசுந்தரம் அரங்கில் நடைபெற்ற கட்சியின் மாநிலத் தலைவர் தோழர் மு.பழனியப்பன் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். இந்திய ஐக்கிய கம்யூ னிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் எஸ்.பாஸ்கரன் அரசியல் மற்றும் ஸ்தாபன அறிக்கைகளை சமர்ப்பித்தார். கட்சியின் மாநில பொருளாளர் தோழர் எஸ். சுந்தரமூர்த்தி, மாநிலத் துணைச்செயலாளர் தோழர் ராணா என்கின்ற ராஜன் உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட 87 மாநிலக் குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி(M.K)யின் மாநிலக் குழுவில் எடுக்கப்பட்ட முக்கிய அரசியல் தீர்மானங்கள்:

எந்தவிதமான சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் அற்ற சமத்துவ சமுதாயத்தை உலகெங்கும் படைப்பதற்காக தன் சிந்தனாசக்தி முழுவதையும் தன் வாழ்நாள் முழுவதிலும் செலவழித்து, கம்யூனிசம் என்ற விஞ்ஞான பூர்வமான அரசியல் தத்துவத்தை உலகத்திற்கு அளித்த மாமேதை கார்ல் மார்க்ஸ். அவரது முழு உருவச் சிலையினை தமிழக அரசின் சார்பில் எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் அமைந்துள்ள கன்னிமாரா நூலகத்தின் வாயிலில் நிறுவிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி(எம்.கே) தனது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.

இந்துத்துவா மதவெறி பாசிச ஆர்.எஸ்.எஸ். பி.ஜே.பி. சங்பரிவார் கும்பல் எந்த வடிவத்திலும் தமிழ் மண்ணில் கால் பதித்துவிட அனுமதிக்க கூடாது என்ற எமது கொள்கையினை முன்னிறுத்தி வருகின்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட முன்னேற் றக் கழகத்தின் தலைமையிலான இந்தியா கூட்டணியை எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி முழுமனதுடன் ஆதரிப்பதாக எமது கட்சி முடிவெடுத்துள்ளது

**நாடு தழுவிய வேலை நிறுத்தம்!**

ஒன்றிய மோடி அரசின் தொழிலாளர் விரோத போக்குகளை கண்டித்து வருகிற 12ம் தேதி நடைபெறும் நாடு தழுவிய வேலை நிறுத் தத்திற்கு இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட்(M.K) கட்சியும், எமது தொழிற்சங்க அமைப்பான இந்திய ஐக்கிய தொழிற்சங்க கவுன்சிலும்(UTUC) முழு ஆதரவு கொடுப்பதுடன் வேலை நிறுத்த போராட்டத்திலும் பங்கெடுப்பது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




நீலகிரி மாவட்டம், கூடலூர் சட்டமன்ற தொகுதியில் தமிழ்நாடு தலைகுனியாது எனும் முக்கிய பிரமுகர்கள் சந்திப்பு நிகழ்ச்சி ஜானகியம்மாள் அரங்கில் மாவட்ட பொறுப்பாளர் கே.எம்.ராஜ்6 தலைமையில், கூடலூர் தொகுதி பார்வையாளர் பரமேஷ்குமார் முன்னிலையில் நடைபெற்றது. நகர செயலாளர் இளஞ்செழியன் வரவேற்றார். நிகழ்ச்சியில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் கடலூர் இள புகழேந்தி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் திராவிடமணி, காசிலிங்கம், ஒன்றிய செயலாளர்கள் சிவானந்தராஜா, சுஜேஷ், ராஜா, உத்தமன், பொதுக்குழு உறுப்பினர்கள் லியாக்கத் அலி, அமிர்தலிங்கம், கழக சொற்பொழிவாளர் பாண்டியராஜ், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ராஜேந்திரன், பேரூர் செயலாளர்கள் சுப்பிரமணி, சின்னவர் உட்பட நிர்வாகிகள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில் கூடலூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள விவசாய சங்கம், வியாபாரிகள் சங்கம், பொதுநல சங்கங்களின் நிர்வாகிகள், தன்னார்வலர்கள் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.